**இலங்கை தர நிர்ணய நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் (நிறுவனம்) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும்விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின்காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடியபொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடியஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடிஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டுமதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி கட்டமைப்பின் 17 இன் இல் இருந்து 2021 வரையான அனைத்து | 2022 ஆம் வருடத்திலே கிடைக்கப்பெற்ற இருப்பினும் 2019 | கணக்கீட்டு மூலாதாரத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் மற்றும் தீர்வையாக்கும் கருத்தின் பிரகாரம் 2019, 2020, 2021 மற்றும் 2023 ஆகிய வருடங்களுக்காக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற வருமானங்கள் அந்த வருடங்களுக்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிலே வருமானம் ரூபா 36,173,790 கூடுதலாக நிதி கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | உரிய வருமானங்கள் தகவல்கள் கிடைக்க பெறாததன் காரணமாக குறித்த கால வரையறைக்குள் கணக்கிடப்படுவதற்கு முடியாது போனது. SLSI கணக்கீட்டு கட்டமைப்பின் முன்னைய வருடத்தின் வருமானத்துக்கு நுழைவதற்கு முடியாது போனதுடன் அதற்காக மீண்டும் VAT உம் விண்ணப்பிக்க முடியாது. அனைத்து பிரிவிற்கும் வருமானம் குறித்த காலத்தில் சேகரித்துக் கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வருமானங்களும் உரிய காலத்துக்கு ஏற்ப கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 37 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் வகுப்பு சரியாக அடையாளம் காணப்படாமல் அலுவலக உபகரண வகுப்பிலே உள்ளடக்கப்பட்டுள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் தொலைபேசி, கணனி உதிரி பாகங்கள் முறையே நூற்றுக்கு 10 மற்றும் நூற்றுக்கு 20 ஆக தேய்மான விகிதங்கள் இரண்டின் கீழ் தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதிலும் தொலைபேசி, கணினி உதிரி பாகங்கள் தேய்மானம் செய்யப்படுகின்ற தேய்மான விகிதங்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணனி, தொலைபேசி மற்றும் அச்சு இயந்திரங்கள் அலுவலக உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் அவை நிலையான சொத்துக்கள் பதிவேட்டினுல் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளது. அடுத்த கணக்கீட்டு வருடத்திலிருந்து கணினி, தொலைபேசி மற்றும் அச்சு இயந்திர கிரயம் வெவ்வேறாக இறுதிக் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேய்மான விகிதங்களை தீர்மானிக்கும் போது அனைத்து விடயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். |
| (இ) | நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் கட்டிடம் ரூபா 363,359,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இலங்கை கணக்கீட்டு நியமம் விளக்கம் 16 இன் 77 ஆவது பிரிவின் பிரகாரம், ஆதனம், பொரிகள் மற்றும் உபகரண உருப்படிகள் மீள்மதிப்பீடு பெறுமதிக்கு வெளியிடும் போது நிதி கூற்றுக்களின் காட்டப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள ப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியாண்டிலே LKAS 16 இன் பிரகாரம் மீண்டும் மதிப்பிடுதலுக்குரிய அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதி கூட்டுக்களுடன் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 39 க்கு முரணாக மீளாய்வாண்டிலே டிசம்பர் 31 இல் உள்ளவாறு, 08 வருடங்களுக்கு அதிக காலத்திலிருந்து | அனைத்து அறவிடப்பட வேண்டிய கடன் பட்டோர் மீதிகளும் அறவிடுதலுக்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கடன் பட்டோர் மீதிகள் காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதிக்கு |

| | | |
|---|---|---|
| காணப்படுகின்ற ரூபா 19,840,443 ஆன 222 கடன் பட்டோர் மீதிகளுக்கான குறைபாட்டு சோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதி காட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கடன் பட்டோர் மீதிகளுக்குமான அறவிடுதலுக்கான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது. குறைபாடு சோதனை அடுத்த வருடத்திலேயே மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 அதிகாரமில்லாத கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமில்லாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 வருடங்களை விட அதிக காலம் காணப்படுகின்ற கடன் பெற்றோர்களின் கூட்டு மொத்தப் பெருமதி ரூபா 12,848,047 நாட்குறிப்பு பதிவின் மூலம் வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய அங்கீகாரம் இன்றி பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளது. | இது முறையான அங்கீகாரம் இல்லாத பதிவழிப்பொன்று அல்ல. இந்தப் பெருமதி நுகர்வாளர் பணத்தை பெற்று தரும் வரைக்கும் வருமானங்கள் கணக்கிலிருந்து கடன் பட்டோர் கணக்கு மாற்றப்பட்டுள்ள தாகும். | கிடைக்கப்பெற வேண்டியவற்றை பதிவழிப்பு செய்யப்படுவது என்றால் விசேடமான அங்கீகாரம் ஒன்று பெறப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2022 சனவரி 18 ஆம் திகதிய PED 01/2022 இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 01ஆம் பிரிவு | பயிற்சி அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக ரூபா 5,000 கொடுப்பனவுக்கு ஒரு உரிமை கோர முடியாத போதிலும், மீளாய்வாண்டில் ஏப்ரல் மாதத்தில் இருந்து செப்டம்பர் வரையான காலத்தில் பட்டதாரி பயிலுனர்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவாக கூட்டு மொத்த பெறுமதி ரூபா 1,202,545 செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை பயிற்சி பட்டதாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.கணக்க ாய்வு அறிக்கையின் ஊடாக இந்த கொடுப்பனவு தொடர்பாக வினவப்பட்டுள்ளமையால் 2022 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து அது நிறுத்தப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளை செலுத்தும் போது உரிய சுற்று நிறுபத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

### 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் வருடத்தில் டிசம்பர் மாத வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் அடையாளம் காணப்படாத | வாடிக்கையாளர்களினால் நேரடியாக வங்கிக்கு வைப்பில் இடுவதனால் அந்த தகவல்களை கணக்கீட்டு | அடையாளம் காணப்படாத வைப்புகள் |

| | | |
|---|---|---|
| வைப்புக்களின் கூட்டு மொத்த பெறுமதி ரூபா 13,675,085 ஆக காணப்பட்டது. இந்த வாய்ப்புக்களுக்கு இடையில் 2020 மற்றும் 2021 வருடங்களில் இருந்து காணப்படுகின்ற அடையாளம் காணப்படாத வைப்புக்களின் பெருமதி ரூபா 2,790,484 ஆக காணப்பட்டதுடன் அந்த பெறுமதியை 2022 ஆம் வருடத்தின் இறுதி வரையிலும் அடையாளம் காணப்படுவதற்கு தவறியிருந்தது. | பிரிவிற்கு கிடைக்க பெறாததன் அடிப்படையில் இந்த முரண்பாடுகள் இடம்பெறுகின்றன. இந்த நிலைமையை சரி செய்வதற்கு கூடிய ஊழியர் தொகையொன்றை ஈடுபடுத்தி மற்றும் வங்கியின் உதவியையும் பெற்றுக்கொண்டு அடையாளம் காணப்படாத வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அடையாளம் காணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.8 தகவல் தொழில்நுட்பம் (IT) பொதுவான கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் உறுதிச் சீட்டுகள் கணினி மயப்படுத்தப்படும் போது அனைத்து உறுதிச் சீட்டுகளும் உரிய கணக்கிற்கு கணக்கிடுவதற்கு முன்னர், கடன் கொடுத்தோராக கணக்கிடப்பட்டிருந்தது. அவ்வாறே உறுதிச் சீட்டில் ஒரே பெறுமதி மற்றும் குறியீடு பல சந்தர்ப்பங்களில் அச்சிடப்பட்டிருந்தது. இவ்வாறான விடயங்கள் நிறுவனத்தினுள் பல காலம் இடம்பெற்று வரும் முரண்பாட்டுக்குரிய நிலைமையினால் ரூபா 2,800,000 செலவிடப்பட்டு நிறுவனத்தினால் BUSY Software பொதியானது, முதல் தடவை கணக்கு பிரிவிற்கு 2022 செப்டம்பர் மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 ஜுன் 30-ம் திகதி ஆகும் போதும் மேற்குறித்த நிலைமைகள் சீர் செய்யப்படாமல் காணப்பட்டது. | விடை அளிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிறுவப்பட்டுள்ள கணனி பயன்பாட்டை துரிதமாக பாவனைக்கு உட்படுத்தி தேவையான சீர் செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 184,081,575 ஆன மிகை ஒன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 56,623,886 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 127,457,689 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றதிற்கு ஏனைய செயற்பாட்டுச் செலவினம் மற்றும் பணியாளர் கிரயம் முறையே ரூபா 101,303,780 மற்றும் ரூபா 15,018,419 வால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா 172,730,740 மற்றும் ரூபா 105,008,355 இனால் அதிகரித்திருந்தமை முக்கியமான காரணங்களாக காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இறக்குமதிகளை பரிசோதிக்கும் வழிகாட்டல் 1.1.4 இன் பிரகாரம், துறைமுக வளாகத்தினுள் மாதிரி | நிறம் அல்லாத ஏனைய அறிக்கைப்படுத்தப்பட்ட பரிசோதனைகள் | வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மயப்படுத்தலுக்காக செய்முறை வசதியீனங்கள் ஏற்படும்போது மற்றும் பரிசோதனை அறிக்கை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள முடியாத போது இறக்குமதியாளரின் மற்றும் உற்பத்தியாளரின் கடந்த கால செயலாற்றல் மற்றும் இறக்குமதியாளரின் தனிப்பட்ட உத்தரவாத கடிதத்தின் (guarantee letter) அடிப்படையில் இறக்குமதி பொருட்கள் இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு விடுவிப்பதற்கு அனுமதி வழங்க முடியும். அவ்வாறு இருந்த போதும் 58 சந்தர்பங்களில் இறக்குமதியாரின் தனிப்பட்ட உத்தரவாத (personal guarantee letter) கடிதம் பெற்றுக் கொள்ளப்படாமல் பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெறுவதற்கு முன்னர் கூட்டுமொத்தம் 10,986,250 கிலோ கிராம் சீனி இருப்பு இறக்குமதியாளரின் களஞ்சியத்துக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | தோல்விகள் இல்லாததன் காரணமாக வெள்ளை சீனி பாதிப்பு குறைந்த பொருள் ஒன்றாகும். நிறங்களில் ஏற்படுகின்ற வேறுபாடுகள் காணப்பட்ட போதும் சுகாதாரத்திற்கு கெடுதியை ஏற்படுத்தாது. அதனால் இலங்கை தர நிர்ணய நிறுவனம் சீனி இருப்பின் மாதிரியை பெற்றுக்கொண்டதன் பின்னர் விற்பனை செய்வதற்காக அனுமதி வழங்கப்படும். அதனால் உத்தரவாத கடிதம் ஒன்று தேவைப்படாது. | வேண்டும். |
| (ஆ) | இறக்குமதியாளரினாள் மின்விசிறி மற்றும் வெப்ப அடுப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 05 சந்தர்ப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பரிசோதனை அறிக்கை தோல்வி அடைந்த சந்தர்பத்தில், மீண்டும் மாதிரி ஒன்றை பெற்றுக் கொள்ளுதல் தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கான ஆரம்ப பரிசோதனை அறிக்கையின் தினத்தில் இருந்து 04 மாத காலமொன்று கடந்திருந்த போதிலும் பாவனைக்கு பொருந்தாத மின்விசிறி தொகையை மாற்றுமாறு பரிந்துரை சமர்ப்பிப்பதற்கு ஒரு வருட காலம் மற்றும் 04 மாதங்கள் காணப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களும், இறக்குமதி இருப்பு தொடர்பாக பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு 07 மாத காலமொன்று பெறப்பட்டிருந்த சந்தர்ப்பம் ஒன்றும், மாதிரியை பெற்றுக் கொள்வதற்கு 05 வார காலம் ஒன்று தாமதமாய் இருந்த சந்தர்ப்பம் ஒன்றும், மாதிரியை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு பொருட்கள் விடுவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டது. | இறக்குமதியாளரின் வாய்மொழி மூலமான வேண்டுகோளின் அடிப்படையில் மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள காலத்தை நீடித்தல், இரசாயன கூடங்களில் ஊழியர்களின் பற்றாக்குறை, இறக்குமதியாளரினால் மீண்டும் மாதிரி பரிசோதனைக்காக ஆயத்தம் இல்லாமை, இந்த தினங்களில் நாட்டினுள் நிலவிய எரிபொருள் நெருக்கடியின் காரணமாக போக்குவரத்து வசதிகளின் பற்றாக்குறை, ஒரு சில சோதனைகள் தோல்வி அடைதல் தீவிரம் இல்லாததன் காரணமாக இவ்வாறான நிலைமைக்கு காரணமாகியுள்ளது. இதற்குப் பிறகு, மீண்டும் மாதிரி பரிசோதனைகளுக்கான தின நீடிப்பை மேற்கொள்வதற்காக எழுத்து மூலமாக வேண்டுகோள்களுக்கு | சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சட்டங்கள் விதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |

| | | |
|---|---|---|
| | மாத்திரம் கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தீவிரம் அல்லாத பரிசோதனைகள் தோல்வி அடைதலுக்காக எச்சரிக்கை கடிதம் ஒன்றின் ஊடாக அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.2 மனித வள மகாமைத்தவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மற்றும் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் இலங்கை தர நிர்னய நிறுவனத்திற்கு பயிற்சிக்காக கனிஷ்ட முகாமைத்துவ குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அளவை விஞ்சி 40 பட்டதாரிகள் ஆட்சேர்க்கப் பட்டிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் மாதத்திலே அவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 1,478,932 செலுத்தப்பட்டிருந்தது. | பட்டதாரி பயிலுனர்களின் சேவைகளை பெற்றுக் கொள்ளுதல், தாபனக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு எவ்வித அடிப்படையிலும் பொருந்தாது. இது பயிற்சி அடிப்படையிலான சேவையை பெற்றுக் கொள்வதாகும். ஆய்வுக்கூடத்தின் மற்றும் ஏனைய பிரிவுகளின் தேவையின் பிரகாரம் பட்டதாரிகளின் சேவைகள் நிறுவனத்துக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக பொதுச்சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | பயிற்சி தேவைப்பாடுகளை முழுமைப்படுத்துவதற்காக குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்காக உள்ள அனைவருக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்க கூடியவாறு பக்கச் சார்பின்றி ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும். அவ்வாறே போதுமான அளவு தொகை ஒன்று கொடுப்பனவாக செலுத்தப்படுவதால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அளவு மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |